# ராணுவ பாஸ் திட்டத்தை கண்டித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம், ஹர்த்தால் பூரண வெற்றி

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் வாகனங்கள் ராணுவ பாஸ் பெறவேண்டும் என்ற உத்தரவைக் கண்டித்து குடாநாட்டில் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலமும், பூரண ஹர்த்தாலும் மேற்கொள்ளப்பட்டது. ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சுமார் நூற்றைம்பதுக்கும் அதிகமான லொறிகளும், தனியார் பஸ்களும் பங்குபற்றின. கோப்பாயிலிருந்து ஆரம்பமான இப்பேரணி பருத்தித்துறை வீதி, நாவலர் வீதி, கே. கே. எஸ். வீதி, ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ். அரசாங்க செயலகத்தை நண்பகல் சென்றடைந்தது. சுமார் பத்து மைல் தூரத்திற்கு நடைபெற்ற வாகனங்களின் இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சுமார் ஒரு மைல் நீளமாக இருந்தது. இது ஒரு இடத்தைத் தாண்டிச்செல்ல சுமார் நாற்பத்தைந்து நிமிடங்கள் வரை சென்றது. "பாஸ்பெற பலாலி போக மாட்டோம்; அனுமதிப்பத்திர முறையை ரத்துச் செய்; பழைய முறைப்படி பஸ்களையும், லொறிகளையும் செல்ல விடு; போன்ற சுலோகங்கள் ஊர்வலத்தில் காணப்பட்டன. ஊர்வலத்தின் முன்பாக 'வட பிராந்திய லொறி, பேருந்து போக்குவரத்துச் சங்கமும், யாழ். முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும் இணைந்து நடாத்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்" என்ற —6ம் பக்கம் பார்க்க

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 17-7-86 வியாழன் (ஆடி 1 துலக 9) முழக்கம் 163

★ ஆயுதப்படையினரின் மற்றொரு சுற்றிவளைப்பு வேட்டை

# மூதூரில் நான்கு கிராமங்களில் 67 தமிழர்கள் சூட்டுக்குப் பலி!

## அகதிகள் முகாமுக்குள் மட்டும் சுமார் 30 பேர் மரணமாகினர்

(திருமலை)

மூதூரிலுள்ள மல்லிகைத்தீவு, மணல்சேனை, பெருவெளி, பட்டித்திடல் ஆகிய தமிழ் கிராமங்களை நேற்றுக்காலை சுற்றிவளைத்த ஆயுதப்படையினர் அங்கு மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் அறுபத்தேழுபேர் மரணமானதாக பிரஜைகள் குழுவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இவர்களில் முப்பது பேருக்கும் அதிகமானோர் பெருவெளி தமிழ் அகதிகள் முகாமில் தங்கியிருந்தவர்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் அகதிகள் முகாமுக்குள் திடீரென நுழைந்த படையினர் அங்கிருந்தவர்களை வெளியே வருமாறு அழைத்து நிரையாக விட்டு சுட்டதாக அங்கிருந்து தப்பிவந்தவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

மூதூர், தெகிவத்தை, சேருவில ஆகிய மூன்று முகாம்களிலிருந்தும் ஏறத்தாழ முந்நூறு ஆயுதப்படையினர் நேற்று அதிகாலை நான்கு மணி முதல் இவ்வேட்டையில் ஈடுபட்டதாகவும், சுமார் முப்பது தமிழர்களை தம்முடன் கொண்டுசென்றதாகவும் தெரி ...6ம் பக்கம் பார்க்க

## திருக்கோவில்: விடுதலைப்புலிகள் நேற்றுநடத்திய இரு தாக்குதல்

நேற்றுக்காலை திருக்கோயில் ராணுவமுகாமிலிருந்து புறப்பட்ட ஜீப் வண்டியொன்றின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய கிரனேட் தாக்குதலால் அதில் பயணம் செய்த கொமாண்டோக்கள் நிலைகுலைந்தனர் பலர் காயமடையவும் நேர்ந்தது.

கொமாண்டோக்களிடமிருந்த முதலுதவிப் பொருட்கள் பல தங்களால் கைப்பற்றப்பட்டதாகவும், தங்கள் தரப்பில் எந்தவித இழப்பும் ஏற்படவில்லையென்றும், புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை பத்துமணியளவில் இதே ராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட மற்றொரு ஜீப்வண்டிமீது அம்பாறை தாண்டியடியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித்தாக்குதலில் ஜீப் வண்டி சிதைந்து சிதறியது.

—6ஆம் பக்கம் பார்க்க

பகலில் மூன்று மணிநேரம் வேலை

## தொலைதொடர்பு ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினார்கள்

கடந்த இரண்டுமாதங்களாக வேலைக்குச் செல்லாதிருந்த யாழ்ப்பாணம் தொலைதொடர்புத் திணைக்கள ஊழியர்கள் அனைவரும் நேற்றைய தினம் மேலிடத்தால் "பாதுகாப்பு வழங்கப்படும்" என அளிக்கப்பட்ட உறுதிமொழியின் பேரில் வேலைக்குத் திரும்பினர்.

சுமார், இரண்டு மாதங்களுக்கு முன்னர் இத்திணைக்களத்தின் அருகேயுள்ள பொலி —6ஆம் பக்கம் பார்க்க

## வழக்கு விசாரணைகளும் நேற்று நடைபெறவில்லை

யாழ். குடாநாட்டில் நேற்று இடம்பெற்ற ஹர்த்தாலினால் போக்குவரத்துகள் இடம்பெறாத காரணங்களையடுத்து யாழ். மாவட்ட, மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களில் நேற்று வழக்கு விசாரணைகள் நடைபெறவில்லை.

யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் சட்டத்தரணிகள் யாழ். மாவட்ட நீதிவான் திரு. வீ. ரி. ஜெக —6ஆம் பக்கம் பார்க்க

ஸ்ரீமாவோவுக்கு ஜனாதிபதி பதில்:

## தேர்தலா? 89-ம் ஆண்டில் பரிசீலனைக்கு எடுக்கிறேன்!

(கொழும்பு)

மாகாணசபைகளை அமைப்பதை நிராகரித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் அரசியல் கட்சிகளின் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும். ஜனாதிபதி ஜயவர்த்தன திருமதி சிறிமாவோ பண்டாரநாயககாவிற்கு நேற்று எழுதிய பதில் கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எழுதிய பத்துப் பக்கங்களைக் கொண்ட கடிதம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி —6ம் பக்கம் பார்க்க

## தொண்டமானாறு தாக்குதல் 3 ராணுவத்தினர் மரணம்

(வல்வெட்டித்துறை)

தொண்டமானாறு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் இங்கு சேதமாக்கப்பட்ட பிரதான பாலத்தைத் திருத்தியமைக்கும் வேலைகளில் முனைந்திருந்த சமயம், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சரமாரியான துப்பாக்கித் தாக்குதலில் அங்கு நின்ற உயர்அதிகாரி ஒருவர் உட்பட மூன்று இராணுவத்தினர் பலியாயினர். ஒரு இராணுவ சிப்பாய் படுகாயமடைந்தார்.

பலியானவர்களும், படுகாயமடைந்தவரும் உடனடியாக ஹெலிக்கொப்டரில் எடுத்துச் செல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து தொண்டமானாறு முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களால் அப்பகுதியில் ஒரு பெண் உட்பட இரு பொதுமக்கள் காயமடைந்தனர். இவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

யாழ். ஆஸ்பத்திரிக்கு

## பழைய அம்புலன்ஸ் ஒன்று கட்டி இழுத்து வரப்பட்டது

யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு பல இழுபறி நிலையில் சுகாதார அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்ட பழமை வாய்ந்த அம்புலன்ஸ் வண்டி நேற்று இங்கு வந்து சேர்ந்தது.

சுகாதார அமைச்சில் எத்தனையோ புதிய நவீன அம்புலன்ஸ் வண்டிகள் இருந்தும் வடபகுதியின் நிலைமையால் இந்த வகை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

—6ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீமாவோவை சந்திப்பர்

கூட்டணியினர் இவ்வார இறுதிக்குள் சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேசுவர் எனத்தெரியவந்துள்ளது.

ரூபவாஹினி பேட்டியில் அமிர்தலிங்கம்:

## தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதிகள் அல்ல அவர்கள் இனத்துக்காக போராடுபவர்கள்

"தமிழ்ப் போராளிகள் வன்செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று செல்வது தவறு தமிழ் மக்களை அநியாயமாகப் படுகொலை செய்யும் ராணுவத்தினரின் அட்டூழியங்களைத் தடை செய்யும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள் என்றுகூறுவதே சரி" என்று ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியொன்றில் கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு இப் பேட்டி ஒளி பரப்பப்பட்டது.

தமது மக்களின் விடுதலைக்காக போராடிவரும் இளைஞர்களைப் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் என்று கூறுவதைத் தம்மால் ஏற்கமுடியாது என்றும் திரு. அமிர்தலிங்கம் இங்கு மேலும் குறிப்பிட்டார்.

ஆயுதப்படையினர் தமிழ் மக்களை அநியாயமாகக்கொலை செய்கின்றனர்; பதில் நடவடிக்கையாக சிங்கள மக்களும் கொல்லப்படுகின்றனர் என்றும் அவர் பேட்டியில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் சொன்னார்.

எந்த யோசனையையாவது ஏற்கவேண்டுமென்று இந்திய —6ஆம் பக்கம் பார்க்

## வரி விளம்பரம்

### காணவில்லை

யோகராசா யோகரஞ்சித். 8 வயது, பொது நிறம், 3 அடி உயரம். தாய் பெயர் தனலட்சுமி, தகப்பன் பெயர் யோகராசா, கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தில் பாலர் வகுப்பில் படித்தவர். உருத்திரபுரம் காந்தி நிலைய விடுதியில் இருந்து 7- 5- 86 தொடக்கம் காணவில்லை. தகப்பன் வன்செயலால் இறந்துவிட்டார். தாயார் தனலட்சுமி C/o விநாயகமூர்த்தி,பூந்தோட்டம், வவுனியாவில் இருக்கின்றார். காணாமல் போன யோகரஞ்சித்தின் சகோதரிகள் செல்விகள் யோகமலர், யோகமாலா இருவரும் தருமபுரம் அன்னை கஸ்தூரிபாய் மகளிர் இல்லத்தில் இருக்கிறார்கள். தாயார் தாங்கொணா வேதனையில் தவிப்பதால் மனிதாபிமான முள்ளோர் காணாமல் போன இம்மாணவனைப் பற்றிய தகவலை சர்வோதயம். கிளிநொச்சி விலாசத்திற்கு அல்லது காந்தி நிலையம் உருத்திரபுரம் விலாசத்திற்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

சி. க. வேலாயுதபிள்ளை

R/24073

### தேவை

மினி சினிமா உபகரணங்கள் 4 அடி திரை உட்பட (National Hifi Set, சோம ஸ்ரீ ஜப்பான் (நெல் குத்தும் இயந்திரம்) நல்ல நிலைமையில். விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். C/o. ஈழமுரசு, விளம்பர இலக்கம் 24054, 140, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

### தேவை

திருமண தரகரின் சேவை. நேரில் விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். C/o. ஈழமுரசு, விளம்பர இலக்கம் 24055, 140, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## குடிநீர் கஷ்டம் போக்கக்கோரிக்கை

( சுண்டுக்குளி )

புங்குடுதீவுக் கிராமத்தில் கடும் வரட்சியினால் கிராம மக்கள் அனுபவித்து வரும் குடி தண்ணீர்க் கஷ்டத்தைப் போக்குமாறு கோரும் மகஜரொன்றை யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜப் பொதுச்செயலாளர் திரு. சி சி. வரதராசாவும், புங்குடுதீவு சனசமூக நிலையங்களின் ஒன்றியப் பொருளாளர் ஆசிரியர் திரு. சி. வி. பேரம்பலமும், யாழ். அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

பிரஸ்தாபமகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: "கடந்த மூன்றுமாத காலமாகப் புங்குடுதீவில் ஏற்பட்ட கடும் வரட்சியினாலும் உக்கிரமாக வீசிக் கொண்டிருக்கும் சோழகக் காற்றினாலும் இங்குள்ள கிணறுகளில் தண்ணீர் இல்லாது வற்றிவிட்டன இதனால் இப்பகுதியில் குடிநீர் இன்றி மக்கள் தாகத்தால் தவிக்கின்றார்கள். புங்குடுதீவு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளும் தண்ணீர் இல்லாது அவதிப்படுகின்றனர். எனவே உடன் நடவடிக்கை எடுத்துக் குடிநீர் வழங்கி விமோசனம் அளிக்க வேண்டும்."

## 'கல்வியே நிலையான செல்வம் என்பதனை உணர்வோம்'

(நீர்வேலி)

"எங்கள் ஒரே ஒரு அழியாத அழிக்க முடியாத அடிப்படையான, அவசியமான சொத்து தான் கல்வி. இன்று பல பாடசாலைகள் இராணுவ முகாம்கள், பாடசாலைகளில் குண்டு வீச்சு கட்டடம் சேதம். என்றெல்லாம் செய்திகள் வெளிவரும். இந்நேரத்திலும் "எங்கள் பணி கல்விப்பணி," "எமது செல்வம் கல்விச் செல்வம்" என்பதை நாம் மறந்து விடலாகாது".

இவ்வாறு நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் முதல் முறையாக இடம் பெற்ற வருடாந்த இல்லமெய் வல்லுநர்போட்டிகளின்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. கு. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில், "ஒரு நாட்டின் மூலதனம் மனிதவளம், இது வளம் பெற வேண்டுமாயின் அடித்தளமான கல்வி அவசியம். கல்வி கற்கும் எந்தவொரு மாணவரும் மனனம் செய்வதோடல்லாமல் செயல் மூலம் கற்றலை ஏற்படுத்தவே பாடசாலை தோறும் பொருட்காட்சிகள் நடாத்தப்படுகின்றன. வளர்ந்து வரும் இப்பாடசாலையின் கண்களாகிய மாணவர்களான உங்களை இமைகளாக இருந்து பாதுகாப்பவர்கள் ஆசிரியர்கள். இந்நிலையில் ஒரு நேர உணவு உண்ண மறந்தாலும் ஒரு நிமிடமேனும் படிக்க மறத்தலாகாது" என்று கூறினார்.

சிறப்பு விருந்தினரான கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஏ. வீ. தங்கராஜாவும் உரையாற்றினர். விளையாட்டுச் செயலாளரும் கல்லூரி ஆங்கில ஆசிரியருமான திரு. வி. மகாதேவா நன்றி நவின்றார்.

வெற்றி பெற்ற மாணவர்களிற்கான பரிசில்களை பிரதம அதிதி வழங்கினார். 185 புள்ளிகளைப் பெற்ற கம்பன் இல்லம் முதலிடத்தையும், 163 புள்ளிகளைப் பெற்ற வள்ளுவன் இல்லம் இரண்டாமிடத்தையும், 157 புள்ளிகளைப் பெற்ற நாவலர் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றன.

## பயிற்சி வகுப்பு

(புலோலி)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் கழக அங்கத்தவர்களுக்கான இலவச தட்டெழுத்துப் வகுப்பொன்றை நடாத்தவுள்ளது.

இவ்வகுப்பு ஆரம்ப விழா இம்மாதம் 19ஆம் திகதி அல்வாய் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத் தலைவர் திரு. வ. சிவச்சந்திரதேவன் தலைமையில் நடைபெறும்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ. ஐயாத்துரை பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைப்பார். இவ் வகுப்பில் பயிற்சிகளை மேற்கொள்வதற்கென பத்து யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## வன்னியகுலம் நூல் வெளியீடு

(அரியாலை)

திரு சி.வன்னியகுலம் அவர்களின் "ஈழத்துப் புனைகதைகளிற் பேச்சு வழக்கு" என்னும் நூல் வெளியீட்டு விழா 19ந் திகதி சனிக்கிழமை நல்லை ஆதீனத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். யாழ்ப்பாணம் முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் இந் நூலுக்குப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் வாழ்த்துரையும், வித்துவான் திரு. க. சொக்கலிங்கம் வெளியீட்டுரையும், நிகழ்த்துவார்கள்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி (திருமதி)பார்வதி கந்தசாமி, திரு. எஸ். சோமகாந்தன் ஆகியோர் ஆய்வுரைகள் நிகழ்த்துவார்கள்.

## தமிழ்ச்செல்வி குடும்பத்துக்கு நிதியுதவி

(புலோலி)

இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட மோட்டார் ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகி மரணமான பருத்தித்துறை தம்பசெட்டியைச் சேர்ந்த செல்வி தமிழ்ச்செல்வி பேரம்பலத்தின் குடும்பத்திற்கு சுப்பர்மடம் கடற்றொழில் விரிவாக்க சேவா சங்கம் 1500 ரூபா நிதியுதவி வழங்கியுள்ளதாக சேவாசங்கத்தின் தலைவர் திரு. ரீ. தியாகராசா தெரிவித்துள்ளார்.

ஏழுபேர் அடங்கியுள்ள இக் குடும்பத்தில் இம் மோட்டார் ஷெல் தாக்குதல்களினால் தமிழ்ச்செல்வி பலியானதுடன் இவரது தாயாரும், இருசகோதரிகளும் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.


### மண் சுமந்த மேனியர் - 2

13 07.86 (ஞாயிற்றுக்கிழமை) அன்று 11.30 மணிக்கு நடைபெற இருந்த நாடகம் 19 07.86 (சனிக்கிழமை) 11.30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நுழைவுச் சீட்டு எடுத்தவர்கள் அதே நுழைவுச் சீட்டுடன் அதேகாட்சியைப் பார்க்கலாம். அத்துடன் காலை 9 மணிக்கும் நாடகக் காட்சி உண்டு, யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலை அரங்கில்.

R/24058



### உடனடி வேலைவாய்ப்பு (ஈராக்)

ஆஸ்பத்திரி வேலையாட்கள் உடனடியாக தேவைப்படுவதால் கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். ஒருவார காலத்தினுள் பிரயாணம் மேற்கொள்ள முடியும்.

சேவ்ரி ரவல்ஸ்

102, மூன்றும் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

B/1417


## நோன்மதிக் கருத்தரங்கு

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ்- கிளையின் நோன்மதிக் கருத்தரங்கு 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்துமணிக்கு யாழ்- இலங்கை ஆசிரியர் சங்க கிளை மண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் நந்தி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் இலக்கிய சர்ச்சைகள் பற்றி திரு இ. முருகையன் உரையாற்றுவார்.

## பிறந்தநாள் வாழ்த்து

✳ சரவணை கிழக்கு, தியாகராசா சரஸ்வதி தம்பதியின் மகன் காண்டீபன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ பருத்தித்துறை, பத்மநாதன் ஈஸ்வரி தம்பதியின் மகன் மகேஸ்வரன் இன்று தனது பதின்மூன்றுவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

## பற்சிகிச்சை முகாம்

(புலோலி)

பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நன்மை கருதி கல்லூரியில் இருவார பற்சிகிச்சை முகாமொன்று நடைபெற்றது. ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத்தினதும், மாணவர் சுகாதார அமைப்பினதும் அனுசரணையுடன் இம்முகாம் நடாத்தப்பட்டது.

இக் கல்லூரியில் இலவச வைத்திய சிகிச்சை முகாமொன்றும் நடாத்தப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுதந்திரக்கட்சி அறிக்கை

மாகாணசபை யோசனைகளை நிராகரித்தது தொடர்பாக ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிநேற்று முன்தினம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இந்த விளக்க அறிக்கை இருப்து பக்கங்களைக் கொண்டுள்ளது.

## இலவச மூக்குக் கண்ணாடி

(அச்சுவேலி)

அச்சுவேலி லயன்ஸ் கழகம் கண்பார்வை குறைந்த வறிய மக்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கியது.

அச்சுவேலி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் தங்கம் வைத்தியசாலையில் நடைபெற்ற கண் பரிசோதனையை அடுத்து மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

## ஆலய விழா

(வேலணை)

சரவணை கட்டுவன் வான் அருள்மிகு ஐயனார் ஆலய திருக் குளிர்த்தி விழாவும், பொங்கல் விழாவும் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நோய், நொடிகள் பீடிக்காவண்ணமும், மக்கள் சுபீட்சமாக வாழவும் வேண்டி பூசைகள், பிரார்த்தனைகள் என்பனவும் நடைபெற்றன.

## முதலாண்டு நினைவஞ்சலி

### திரு. சி. சந்திரமோகன் (கவி)

மண்ணில் மலர்ந்த வண்ணம்: 27.7.1962 (அண்ணாசிலையடி)
விண்ணில் விரைந்தவண்ணம்: 17.7.1985 (நெதர்லாந்து)



எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே, குழந்தை உள்ளமே, கனிவின் நிறைவே, நீ ஆழ்கடலின் மடியில் மூழ்கி உயிரைப் பறி கொடுத்தாயே! உன் அன்பு முகத்தையே காணாது ஓராண்டு ஆகியும் உன் நினைவும் கனவும் எமக்கு என்றும் பசுமையே. எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே! உங்கள் மழலைச் செல்வன் அப்பா எங்கேயென்று அழைத்திடும் வேளையில் ஆறுதல் கூற யார்வருவார்? நீங்காத நினைவுடன் எம் நெஞ்சில் நிலையான இடம் கொண்டு ஆண்டொன்று கழித்து விட்டாய்! நிகழ்ந்தது தெரியாமலே துடிக்கின்றோம் அன்புக் கலைவிளக்கே! உம் பிரிவால் வாடுகின்றோம், வருந்துகின்றோம்.

ஜெய பவனம்
அண்ணாசிலையடி,
கரணவாய் தெற்கு,
R/24056/57

மனைவி ச. இந்திராதேவி
மகன் ச. பிரசாந்த்
மைத்துனர்கள் சிவபாதம்,
இராசேந்திரம், தெய்வேந்திரம்.

## மினிபஸ் காரர்கள்

# இஷ்டம் போல் கட்டணம் வசூலிப்பதால் கஷ்டம்

(சாவகச்சேரி)

டீசல் விலையேற்றம் என்ற காரணத்தைச் சொல்லி, மினிபஸ் நடத்துனர்கள் பிரயாணிகளிடமிருந்து அதிக கட்டணத்தை வசூலிக்கிறார்கள். அத்துடனில்லாமல் சண்டித்தனமும் கூடப் பேசுகிறார்கள். இந்த அடாவடித்தனத்தை யாரிடம் முறையிடுவது? என கவலை தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு இ. போ. ச. பஸ்சில் 7ரூபா 50சதம் எடுக்கும் அதே நேரத்தில் மினிபஸ் 15 ரூபா எடுக்கிறது. சாவகச்சேரியிலிருந்து பரந்தனுக்கு இ. போ. ச. பஸ்சில் ரூபா 5 அறவிடப்படுகிறது. மினிபஸ்சிற்கு ரூபா 12 எடுக்கப்படுகிறதாம். ஆனால் கடந்த நாட்களைவிட இப்பொழுது டீசல் விலை இறங்கியும் மினிபஸ் கட்டணம் மட்டும் இறங்கவில்லையே! எனக் கூறப்படுகிறது.

சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து மூலைத்தீவு சென்ற நடத்துனர் கட்டணம் சம்பந்தமாக பல பிரயாணிகளிடம் பிரச்சினையை ஏற்படுத்தினார். அது மட்டுமல்ல சண்டித்தனமும் காட்டினார். ஒரு சிறிய பெட்டி விஷயத்தில் பலாத்காரமாக ரூ7 50 சதம் கட்டணமும் செலுத்த வேண்டும் அல்லது இறக்கிவிடுவேன் என்று மரியாதைக்குறைவாக நடந்துகொண்டார் என புகார் செய்யப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த ஒரு பிரயாணி ஆனையிறவு தடை முகாமில் பொலிசாரிடம் இது பற்றிப் புகார் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சிறிது நேர விசாரணைக்குப் பின்னர் அந்த அதிகாரிகள் பிரயாணத்தைத் தொடர அனுமதியளித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ்ப்பகுதிகளில் இன்று ஏற்பட்டுவரும் சமுதாய மாற்றம் ஆராய்ச்சிக்குரியது!

(அரியாலை)

"இன்று தமிழ்ப்பகுதிகளில் ஏற்பட்டுவரும் சமுதாய மாற்றம் இன்னும் சில காலத்தில் பல உலக நாடுகள் பின்பற்ற வேண்டிய மாற்றமாக இருக்கும். இந்த மாற்றங்கள் ஆராய்ச்சிக்குட்பட்டதாக இருக்கும், மாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காலத்தில். நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறபடியால் அவற்றைப் பற்றித் தெரியாமல் இருக்கிறோம். சட்டத்தரணிகளின் செயற்பாடு இல்லாத இச் சூழ்நிலையிலும் சமுதாயம் சரியாகவே இயங்குகிறது. உண்மையான நியாயம் பஞ்சாயத்தில் தான் இருக்கிறது. சட்டத்தரணிகளின் நீதிமன்றத்தில் திகதி கேட்கிறார்கள். அரசியலிலும் திகதி கேட்கிறார்கள். நான் அரசியல் வாதியும் அல்ல அரசியல் வாதியாகவும் வரமாட்டேன், பதவி என்பது போதை வஸ்துப் போன்றது. அதனை கவனமாகக் கையாள வேண்டும் சனசமூக நிலையங்கள் பத்திரிகை போடுவதை முக்கிய பணியாகக் கொண்டிருந்தாலும், சமுதாயத்தில் நடுத்தரத்திற்குக் கீழ் பட்டவர்களுக்கு உதவ வேண்டும்."

இவ்வாறு யாழ். மாகாண சபை ஆணையாளர் திரு.சீ.வீ. கே. சிவஞானம் அவர்கள் யாழ். மாகாணசபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் அமைக்கும் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இக் கூட்டம் நல்லூர் இந்து விடுதியில் திரு ஆ. இரகுநாதன் தலைமையில் நடைபெற்றது. யாழ். மாவட்டச் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஆ. இரகுநாதன் தனது தலைமையுரையில் "உண்மையான சுதந்திரம் என்பது அரசியல் கைம்மாற்றம் மட்டுமன்றி கலை கலாச்சார, அபிவிருத்தியுடன் இணைந்ததாக இருக்கும். தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கமாகவே இச் சமாசத்தை அமைக்க உள்ளோம். இச் சூழ் நிலையில் அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒரு பொதுத்தாபனத்திடம் ஒப்படைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது" என்றார்.

யாழ். மாவட்டச் சன சமூக நிலையங்களின் சமாசப் பொதுச் செயலாளர் திரு. சி. வரதராசா உரையாற்றுகையில் யாழ்.மாவட்டத்தில் 681 சனசமூக நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு சனசமூக நிலையம் ஆண்டிற்கு ஒருமுறை பொதுக் கூட்டம் கூடி புதிய நிருவாகிகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்றார். திரு. இ. தவபாலன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

# பல நெருக்கடி மத்தியில் மாணவர் கல்வி கற்கின்றனர்

(குருநகர்)

"யாழ்ப்பாணப் பகுதி சில மாதங்களாக இருள் சூழ்ந்த கறைபடிந்த நிலையிலேயே இருந்து வருகிறது. அதனால் இங்கே உள்ள திணைக்களங்கள் ஒழுங்காக இயங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதே நிலைமைதான் கல்வித் திணைக்களத்திற்கு உண்டு. என்றாலும் எமது உத்தியோகத்தர்கள், கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்களின் முன் முயற்சியால் யாழ்ப்பாணப் பகுதியில் கல்வியையும், விளையாட்டுப் பயிற்சிகளையும் ஊக்குவித்து வளர்த்து வருவதை அவதானிக்கும் பொழுது திருப்தி அடைகிறேன்."

யாழ். புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மத்தியூஸ் வீதி விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய அதிபர் திரு ஏ ஐ. எல். குணநாயகம் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய அவர் "என்னை அழைக்கின்ற பாடசாலைகளில் எல்லாம் ஒரு மாலையை போட்டுவிட்டு கலலூரித் தேவைகளைத் தான் அடுக்கிக் கொண்டு போவார்கள். ஆனால் இங்கோ எதிர் மாறாக எதுவித வேண்டுதல்களையும் முன்வைக்கவில்லை. எனினும் என்னாலான சகல உதவிகளையும் இக்கல்லூரிக்கு வழங்குவேன். மேலும் எந்த மாதிரியான சூழலிலும் கல்வியைக் கற்றுத்தேற வேண்டியதை ஒவ்வொரு மாணவனும், மாணவியும் உணர்ந்து இக்கால நெருக்கடிக்கூடாகவும் முயற்சி எடுத்து கல்வியைப் பெற்றுக் கொள்ளத் தெண்டிக்க வேண்டும் என்றார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்-வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன், பேராலயப்பங்குத்தந்தைஅருட் திரு. எஸ். எச். ஜெபநேசன் அடிகள் கலந்துசிறப்பித்தனர்.

# இராணுவம் மூதாட்டியிடம் பலப்பிரயோகம்

(சுன்னாகம்)

வசாவிளானன் முகாமுக் கண்மையில் அமைந்துள்ள வீட்டிற்குள் புகுந்த இராணுவத்தினர் மூதாட்டியொருவரின் தங்க நகைகளை அபகரித்ததுடன் அவரைப் பலமாகத் தாக்கியுமுள்ளனர். திருமதி க. இளையாச்சி (85) என்பவரது வீட்டிற்குள் எதிர்பாராத விதமாக புகுந்து சொண்ட இராணுவத்தினர் படுக்கையிலிருந்த மூதாட்டியைவெளியே வருமாறு அழைத்துள்ளனர். அவர் தனது இயலாத்தன்மையைக் கூறி நடக்க முடியாதெனத் தெரிவிக்கவே கோபமுற்ற இராணுவத்தினர் அவரைக் காலால் தாக்கியுள்ளனர். கழுத்தில் கட்டியிருந்த அட்சரக்கூட்டை அறுத்தெடுத்ததுடன் காதிலிருந்ததும் கழற்றி எடுக்கப்பட்டது. இத்தனையும் நடந்த போது அவரின் மகன் வீட்டினுள் ஒளிந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## தேசிய செல்வமான பனையை

# முழுமையாகப் பயன்படுத்தி உயர்வுகாண வேண்டும்

(சுண்டுக்குளி)

'எமது வளங்களில் முக்கியமானதான பனைவளத்தை நாம் முழு அளவில் பயன்படுத்த வேண்டும். பனை வளத்தை அபிவிருத்திச் செய்து எமது தேசிய செல்வத்தைப் பெருக்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு பாடு படவேண்டும். கல்லாக்காரம் எமக்குக் கிடைத்த இயற்கையான வரப்பிரசாதமாகும். இந்தியாவில் கல்லாக்காரம் 'காயகல்பம்' என்று போற்றிப் புகழப்படுகின்றது. இதனை நான் நேரில் கண்டு அனுபவித்து அதிசயித்திருக்கின்றேன். அங்கு நான் தரிசித்த சுவாமிகள் ஒருவருக்கு கல்லாக்காரத்தையே காணிக்கையாகச் செலுத்தி வணங்கினேன். கல்லாக்காரம் எமது நாட்டிலும் கிடைக்கக் கூடிதாக உற்பத்தியை மேற்கொண்டுவரும் பனை அபிவிருத்திச் சபையின் முயற்சிகள் பாராட்டுதற்குரியது.'

இவ்வாறு மில்க்வைற் அதிபரும், பனை அபிவிருத்திச் சபையின் இயக்குநருமான தொழிலதிபர் திரு. க. கனகராசா ஜே பி 'கற்பகம்' சஞ்சிகையில் பனை அபிவிருத்திச் சபையால் நடாத்தப்பட கல்லாக்காரம் கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கால பரிசுத் தொகைகளை 'கற்பகம்' வெளியீட்டாளர்களான வட மாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜப் பொது முகாமையாளர் திரு. ஆ. ந இராசேந்திரனிடம் கையளித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவம் பனை அபிவிருத்திச் சபையின் மண்டபத்தில் சபைத் தலைவர், திரு' க. நடராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

திரு. கனகராசா தொடர் பேசுகையில் கூறியதாவது; இயற்கையாக எமக்குக் கிடைக்கக் கூடிய வளங்களை நாம் கூடியவரை பயன் படுத்தத் தவறக்கூடாது. கல்லாக்காரம் சர்வரோக நிவாரணியாகவும் விளங்குகின்றது. எனவே கல்லாக்காரத்தை இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்படாது நாமே உற்பத்திசெய்து பயன்பெற வேண்டும். இதற்குப் பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கையெடுத்து ஊக்கமளித்துவருவது மகிழ்ச்சியளிக்கின்றது. நாம் பனை உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்து எமது அன்றாட வாழ்க்கையுடன் இணைந்து கொள்ள வேண்டும். அப்பொழுதே இந்தியாவைப் போன்று நாமும் பனம் பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும். என்றார்.

சபையினால் உற்பத்திசெய்யப்பட்ட பனந்தும்பு பிரஷ்களையும் திரு. கனகராசா இவ்வைபவத்தில் வைத்துப் பெற்றுக் கொண்டார்.

# 'சைவ ஞானத்தெளிவுடன் கிரியைகள் வேண்டும்'

(சுன்னாகம்)

"சைவாலயக்கிரியைகள் பக்தி விநயப் பண்புடன் நிகழுமானால் அதற்கான முழுப் பலனையும் நாம் பெறமுடியும். சைவ ஞானத் தெளிவுடன் நடைபெறும் கிரியைகளே பலனுக்குரியதாகின்றது. ஆலயங்களில் நடைபெறும் கிரிகைகள் பற்றித் தமிழில் நூல்கள் இல்லாததினால் வடமொழித் தேர்ச்சி இல்லாத சிவாச்சாரியார்கள் அவற்றைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியாத சூழ்நிலையேற்பட்டது. இப் பெருங்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு கோப்பாய் சிவம் எழுதிய சைவாலயக் கிரியைகள் என்ற நூல் சைவ மக்களுக்குக் கிடைத்த மாபெரும் வரப்பிரசாதமாகும்."

இவ்வாறு சுன்னாகம் மயிலணி ஸ்ரீ கந்தசாமி ஆலயத்தில் நடைபெற்ற கோப்பாய் சிவம் எழுதிய சைவாலயக்கிரியைகள் நூல் அறிமுக விழாவில் ஏழாலை சைவசமய அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சி. சக்திகிரீபன் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் வைபவத்திற்குத் தலைமை வகித்தார். ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ச. வரதராஜக் குருக்களின் ஆசியுரையின் பின் திரு சக்திகிரீபன் தொடர்ந்து கூறியதாவது: சைவாலயக்கிரியைகள் என்னும் இந்நூல் வடமொழியிலுள்ள கிரியைகளையும், கிரியாபாகங்களையும் தமிழில் தந்திருப்பதோடு, சைவக் கிரியைகளில் முக்கிய இடம் பெறும் முத்திரைகளுக்கான படங்களைத் தகுந்த முறையில் வெளியிட்டிருப்பது சிறப்பம்சங்களிலொன்றாகும்.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் சைவக் கிரியைகளைப் பேணுவதோடு சைவக் கிரியைகளோடு தொடர்புபடும் அனைத்துப் பணியாளர்களையும் போற்றிக் காக்க வேண்டியது எமது தலையாய கடமைகளில் முதன்மை பெற்றுள்ளது" பண்டிதர் கா. நமசிவாயம் உட்படப் பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

# வீடமைப்பு நிதி

நயினாதீவில் செவன நிதியிலிருந்து வீடமைப்பதற்காக பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் இருவருக்கு நிதி வழங்கப்படவுள்ளது.

நயினாதீவு தெற்கு கி. சே. அலுவலர் பிரிவில் திருமதி சுப்பிரமணியம் பேரின்பநாயகி என்பவரும் வடக்கு கி. சே. அலுவலர் பிரிவில் திருமதி. நாகமணி நாகமுத்து என்பவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வழங்கப்படும் வீடமைப்புக்கான பணத்தொகை தலா ஐயாயிரம் ரூபாவும் திருப்பிச் செலுத்தத் தேவையில்லை. இது போன்ற நடவடிக்கைகளை வேலணை வீடமைப்பு தொழில்நுட்ப அலுவலர் துரிதப்படுத்தியுள்ளார்.

## நல்லூர் உற்சவகாலத்தில்

# நாவலர் வரலாற்றைச் சித்தரிக்கும் கண்காட்சி

(அரியாலை)

"தமிழர் வரலாற்றில் குறிப்பாகச் சமய வரலாற்றில் ஆறுமுக நாவலருக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின்போது தமிழ் நாடு மெரினா கடற்கரையில் எல்லா அறிஞர்களுக்கும் சிலை வைத்தார்கள். ஆனால் நாவலருக்குச் சிலை வைக்கவில்லை. அது உண்மையில் இருட்டடிப்புத்தான். அதை நிவிர்த்திபண்ண இங்கு எழுச்சி உண்டானது. அதனால் நாவலர் சபை நாவலருக்குச் சிலை வைத்தது. மேலைநாட்டு ஆலயங்களில் வரலாற்று விடயங்கள் ஓவியங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு இந்தியாவில் உருவச்சிலை வடிவில் உள்ளது போல இங்கு நாவலரின் வாழ்க்கை வரலாற்றை உருவச்சிலை வடிவாக்க முன்வந்துள்ளோம். சமய குரவர் ஒருவருடைய வரலாற்றை நாம் மாத்திரம் அன்றி எதிர்காலச் சந்ததியினரும் அறிய இதனால் வாய்ப்புண்டாகும்."

இவ்வாறு நாவலர் சபைத் துணைத்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், நாவலர் வரலாற்றுக் கண்காட்சிக்கான சிற்பங்களை உருவாக்கும் அங்குரார்ப்பண வைபவத்தில் தலைமையுரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

இவ் வைபவம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நடைபெற்றது. நல்லை ஆதீன கர்த்தர் சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள், திருவாளர்கள் எஸ். வி. முருகேசு, த. சண்முகலிங்கம், ம. சிவராசா ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்கள். பிரதான சிற்பி திரு. க. ரவீந்திரராசாவும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார். யாழ். மாநகர ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானம் தமது வரவேற்புரையில், நாவலரின் வாழ்க்கை வரலாற்றை சிற்ப வடிவில் தயாரித்து, நல்லூர்த் திருவிழா பத்தாம் நாளன்று வரலாற்றுக் கண்காட்சியாக நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

## மயிலிட்டிக்கரை

# பிரஜைகள் குழு கூட்டத்தில் வாக்குவாதம் இழுபறி நிலை

(சுன்னாகம்)

புதுவருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்ற போது ஏற்பட்ட வாக்குவாதத்தாலும், இழுபறிநிலையாலும் மயிலிட்டிக்கரை பிரஜைகள் குழுவின் வருடாந்த பொதுக் கூட்டம் திகதி எதுவும் குறிப்பிடாத நிலையில் ஒத்திவைக்கப்பட்டது. மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் அருட்தந்தை ரி. தேவராசன் அடிகளாரின் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது இரு குழுவினருக்கிடையேவாக்குவாதங்கள் நிகழ்ந்த வண்ணமிருந்தன.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவுகள் நடைபெறவாரம்பமான போது முன்னைய செயலாளர். திரு. இரத்தினராசா தலைமையில் நால்வர் வெளி நடப்புச் செய்தபோது கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது- பொதுமக்களுக்குப் பல வகையிலும் உதவ வேண்டிய பிரஜைகள் குழுவின் இந்நடவடிக்கை பகுதிமக்களை மனவிரக்திக்குள்ளாக்கியுள்ளது.

குடிபெயர்ந்து சென்ற மக்களைத் திருப்பவும் குடியமர்த்துவதற்கேற்ற ஒழுங்குகளை இராணுவ உயர் அதிகாரி இப்பிரஜைகள் குழுவினருடன் கலந்து பேசினார்.

ஈழமுரசு

உதய சிந்தனை

ஒருவனது உண்மையான குணம் அவனது கரங்களுக்கு அதிகாரம் வந்த பின்னர்தான் வெட்டவெளிச்சமாகும்.

—அறிஞர் பிட்டகஸ்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 22437

## இதய ஒலி

17-7-86 வியாழக்கிழமை (அக்ஷய) ஆடி 1

# அகதிகளை வருத்துவது அரசியலில் தர்மமாகுமா?

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் தாக்குதல்களால் அந்த மாவட்டம் சகல வழிகளாலும் இப்போது பின்தள்ளப்பட்டு, இயங்க முடியாத நிலைக்கு வந்துள்ளது.

உணவுற்பத்தியில் தன்னிறைவு கண்டு, வெளிமாவட்டங்களுக்கே ஏற்றுமதி செய்த கிளிநொச்சி, இன்று தனது உணவுத் தேவைக்கு மற்றையவர்களிடம் கையேந்தி நிற்கும் நிலை உருவாகியுள்ளது.

நெல் உற்பத்தி, உப-உணவுற்பத்தி என்பன இங்கு பூஜ்ய நிலை கண்டுள்ளது.

உயர் அரசாங்க அதிகாரிகள் பலரே தமது அலுவலங்களுக்குச் செல்ல முடியாது வீடுகளில் தங்கியுள்ளனர்.

போக்குவரத்து, தொடர்புச் சாதனங்கள், விவசாயம், வர்த்தகம் எதுவுமின்றி கிளிநொச்சி ஒரு சூனியப் பிரதேசமாக மாற்றப்பட்டு வருகின்றது.

வரண்ட பிரதேசமான வடமாகாணத்தில் வளம் நிறைந்த பூமியாகத் திகழ்ந்த கிளிநொச்சி இன்று வனாந்தரமாக மாற்றப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் குடாநாட்டு மக்கள் கிளிநொச்சியை நோக்கி இடம்பெயர்ந்து சென்றதுண்டு.

ஆனால் இன்று கிளிநொச்சியிலிருந்து குடிமக்கள் இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

தினசரி எமக்கு வந்து கொண்டிருக்கும் பல செய்திகளும், கிளிநொச்சியிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் குடும்பங்கள் படும் அவல நிலையைத் தெரிவித்து வருகின்றன.

கிளிநொச்சியின் பதில் அரசாங்க அதிபராகவும் பணியாற்றும் வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே.வி. லோகேஸ்வரன் கடந்த வார இறுதியில் கிளிநொச்சி நிலையை அறிவதற்காக உயர் மாநாடொன்றை யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடத்தினார்.

ஐயாயிரத்து முந்நூறு தமிழ்க் குடும்பங்கள் கிளிநொச்சியிலிருந்து கடந்த இரண்டு மாதங்களில் வெளியேறியதாக உத்தியோகபூர்வமாக இம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளியேறியவர்களில் சுமார் ஆயிரம் குடும்பங்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளன. இவர்களில் சுமார் அறுநூறு குடும்பங்கள் தங்கியிருக்க இடமின்றி வீதிகளில் அலைவதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

உணவு, உடை, உறையுள் எதுவுமின்றி அல்லலுறும் இக் குடும்பங்களுக்கு அரசாங்க உதவி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அகதிகளிலேயே மிகவும் மோசமான நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளதாகவும் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால் கிளிநொச்சியிலிருந்து வந்துள்ள தமிழர்களுக்கு அரசாங்க செலவில் எந்த விதமான உதவியும் வழங்கக் கூடாதென்று புனர்வாழ்வு அமைச்சு கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளது.

அகதி முகாம்களில் இவர்களைத் தங்க அனுமதிக்கக் கூடாதெனவும், இவர்களுக்கெனப் புதிதாக முகாம்கள் எதுவும் அமைக்கக் கூடாதெனவும் புனர் வாழ்வு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஆகக்குறைந்தது இவர்கள் தங்கியிருக்கும் இடங்களில் வைத்து அரிசி, மா, சீனி ஆகியவைகளைப் பங்கீட்டு அளவில்கூட வழங்கக் கூடாதெனவும் கூட அந்த உத்தரவு தெரிவிக்கின்றது.

இதன் நோக்கம் என்னவாக இருக்கலாம்?

கிளிநொச்சியிலிருந்து அகதிகளாக எவரும் வெளியேறவில்லை என்று உத்தியோகபூர்வ பதிவேடுகள் மூலம் எடுத்துக் காட்டவா? அல்லது அங்கிருந்து வெளியேறியவர்களை பட்டினியால் சாகடிக்கச் செய்யவா? அல்லது அவர்களை மீண்டும் கிளிநொச்சி செல்ல வைத்து இராணுவத்தின் படுகொலைக்கு உட்படுத்தவா?

நிச்சயமாக இம்மூன்றில் ஏதாவது ஒன்றுதான் காரணமாக இருக்க வேண்டும்.

இராணுவத் தாக்குதல்களால் உயிருக்குப் பயந்து வெளியேறியவர்களை மீண்டும் அங்கு செல்லுமாறு எந்த விதத்திலும் நிர்ப்பந்திக்கக் கூடாது!

வேண்டுமானால் இராணுவ முகாமை அரசாங்கம் மூட நடவடிக்கை எடுக்கலாம்.

இதனைவிடுத்து, மனச்சாட்சி என்பது மருந்துக்கும் இல்லாத வகையில் அகதிகளைப் பட்டினி போட்டு வருத்துவது தர்மமான செயலாகாது!

# இராணுவ அடக்குமுறையிலான தந்திரம், ஏமாற்றுவித்தைகள் நீண்டகாலத்துக்கு பலிக்குமா?

இலங்கை அரசியலில், 'ஜே. ஆர்.' மதியூகம், தந்திரம், நீண்டு நிலைக்கும் வகையாக ஏனைய அரசியல் பாத்திரதாரிகளை எத்தும் ஆற்றல், என்பவற்றுக்குப் பெயர் பெற்றவர். கடும் அரசியல்மயமான ஒரு சமுதாயமானது கிராமப் பிரதேசங்களிற்கூட அதன் ஜனாதிபதியை அவ்வாறுதான் குறிப்பிட்டு அழைக்கிறது. தொலைக்காட்சியில் வரும் 'டலஸ்' எனும் தொடர்ச் சித்திரத்தில் பங்குவகிக்கும் ஒரு பிரதான பாத்திரதாரியைக் கோடானுகோடி அமெரிக்கர்கள் பெயரிட்டுள்ளதுபோல என்று ஒரு வகையில் கூறலாம். ஆனால், இவை இரண்டுக்கும் ஒன்றோடொன்று தொடர்பு இணைக்க வெனிலோ இயலாது.

'ஜே. ஆரை' தூற்றுவோராகட்டும், போற்றுவோராகட்டும், அவரது போக்கிற்கு நியாயம் கற்பிப்போராகட்டும். எத்தராகிய அவருடைய இக்குணத்தை முக்கியப்படுத்திக் காண்பிக்கின்றனர்.

ஆனாலும், தமிழர் விடயத்தை, மனித இன விடயம் எனப் பெயரிட்டு அழைக்கப்படும் இக்கருமத்தை, இலங்கை ஜனாதிபதி கையாள்கையில் உள்ள மெய்ம்மைகள், விளைவுகள் என்பவற்றோடு வைத்து ஒப்புநோக்கின், இக்குணஅம்சக் கணிப்பில் சம்பிரதாய பூர்வமான அரசியல் ஞானம் தென்படுவதாகப் பெரும்பாலும் கொள்ள இயலாது.

ஜனாதிபதி 'ஜே. ஆரின்' இந்த ஏய்க்கும், ஏமாற்றும் குணம் செயற்படும் விதத்தைச் சற்று அவதானிப்போமா? நீடித்த ஒரு காலமாக, இலங்கைத் தமிழர் அரசியல் தலைமைத்துவத்தை 'ஜே. ஆர்.' ஏமாற்றினார் போலத்தோன்றிற்று. 'விடாத கண்டர்களான' தமிழர் விடுதலைப் போராளிகளைக்கூட ஒரு சிறு காலப் பகுதியின் போது அவர் ஏமாற்றி வந்தார். 'யுத்த இடை நிறுத்த' நாட்களை அண்மித்த காலத்திலும் 1985 இல் திம்பு மாநகரில் நடந்தேறிய சமாதான மாநாட்டின் போதுமே இந்த 'ஏமாற்றுவித்தை' பலித்தது.

இந்தியாவின் நல்லெண்ணத்தைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திய ஜே.ஆர். அடித்தளத்தில் மிருகத்தனமான ஓர் இராணுவ அடக்குமுறைத் தந்திரோபாயத்தை நன்கு அபிவிருத்தியாக்கத் தொடங்கிய அதேவேளை, தாம் ஓர் அரசியல் தீர்வையே துரந்து செல்வதாகக் காட்டிக் கொண்டார். உள்ளதைச் சொல்வதானால் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் அநுக்கிரகத்தால் ஓர் இந்திய விமானத்தில் அவருடன் சேர்ந்து சூறுவளியால் சின்னாபின்னப்பட்ட பங்களாதேஷ் நாட்டிற்குச் சென்றஆண்டு ஒருபயணத்தை ஒழுங்குசெய்து கொண்டபோது "ஜே. ஆர்." தான் இந்தியப் பிரதமரை ஒரு சவாரியிற் கொண்டு சென்றார் போலத் தோற்றியது. எதனைத் தான் கூறினாலும் குறைந்த பட்சம் இலங்கைத் தீவின் தமிழர் மத்தியில் ஏற்பட்டிருந்த தோற்றம் அதுதான்.

இன்றோ, இந்த அடுக்கடுக்கான குள்ளத்தனமும், தந்திரோபாயப் பிரயோகம் எல்லாவற்றின் இறுதியிலும் இலங்கை ஜனாதிபதி எவ்வாறு தோற்றமளிக்கிறார்? இலங்கைத் தீவினுள்ளும் அதற்கும் புறத்தேயும் உள்ள சுதந்திரஅவதானிகள் அநேகர் கேட்கும் வினா இதுதான்: அவரது அரசாங்கமோ மேன்மேலும் ஓங்கி வரும் தொல்லைகளுக்கு ஆளாகி செய்வது என்னது என்று அறியாது தயங்கி நிற்கிறது. தம்மையும் இத்தகைய தமது அரசாங்கத்தையும் ஜே. ஆர். ஒரு குறிக்கோளற்ற, பிரமாண்டமான செலவு ஏற்படுத்தும் பேரனர்த்தமான ஒரு சவாரியில் ஏமாற்றிக் கொண்டு சென்றுள்ளாரா?

ஏனெனில், இராணுவ நிலைப்பாடு ஒரு புறமும "நாம் அதை இதை எல்லாம் சாதித்துள்ளோம்" என்ற படாடோபமான பேச்சுக்கள் இன்னொரு புறமும், எதற்கெடுத்தாலும் போருக்குத் தயார் நிலையைப் பிரசித்தப்படுத்தும் மட்டுமீறிய மேடைப்பேச்சு இன்னொரு புறமும், இந் நெருக்கடியின் விளைவுகளின்றும் மீண்டு, கொழும்பு அரசாங்கம் நன்கு முன்னேறிவருகிறது எனச் சில அறிகுறிகள் இன்னொருபுறமும் தென்பட்டும் கூடவ க்கிலும், கிழக்கிலுமுள்ள இலங்கைத் தமிழரின் பிரதேசங்களில் நிலவும் நிலைமைமாத்திரம் அல்லாது பொதுவாக இலங்கைத் தீவு பூராவுமே உள்ள நிலைமை 1983 பிற்பகுதியை விடத் தரவாரியாக மோசமாக்கியுள்ளது. இதற்கிடையில் இத்தீவின் நிதி நிலைமைபற்றி ஒரு ஒருவார்த்தை. இலங்கை உட்பட வளர்முக நாடுகளுக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுமம் சற்று முன்னர்தான் 1986—87க்கான உதவித் தொகுப்பை இலங்கைக்கு வழங்க இணங்கியுள்ளது. முந்திய ஆண்டைவிட இது குறிப்பிடத்தகும் ஓர் அதிகரிப்பாகும். 7030 இலட்சம் அமெரிக்க டொலர் ஆகிய இவ்வாண்டுத் தொகை 1985—86ஐ விடப் பெயரளவில் 46 சதவிகிதமும், உள்ளபடியாக இருபத்துமூன்று சதவிகிதமுமான ஓர் அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது.

1983 பிற்பகுதியில் தமிழினத்திற்கு எதிரான "வேள்வி"யை உடனடுத்து, இந்திய நல்லெண்ணத் துணையுடன் ஓர் அரசியல் முனைப்பு நடவடிக்கையாக உருவானதுதான் 'பின்னிணைப்புசி' என வழங்கும் ஆவணம்.

பல கட்சி மகாநாடு இப்போது நடைபெறுகின்றது. இத் தீவின்கண்ணுள்ள பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகள் இதற்கு அழைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பௌத்த மகா சங்கம் போலும் சமய ஒழுங்கமைப்புகள் இதனினின்றும் விடுபட்டுள்ளன. 1984-ம் ஆண்டின் சர்வகட்சி மகாநாட்டுக்கு இச்சங்கம் அழைக்கப்பெற்றமையால் தீங்கு விளைந்தமை நினைவிருக்கலாம். பிற சூழ்நிலைகளின் கீழாயின் பல கட்சி மகாநாட்டு ஆயத்தங்கள், ஓர் அரசியல் தீர்வு நோக்கிய நன்னம்பிக்கையைச் சுடர்விடச் செய்திருக்கும். அத்துடன் அத்தகைய நம்பிக்கை மிக வேண்டியதாகவும் இருந்தது. மாநாடு யூன் மாதக் கடைசி வாரத்தில் ஆரம்பமாகிறது. பத்திரிகைகள், வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மிகப் பெரிதுபடுத்திய ஜே. ஆரின் சோவியத் ஒன்றிய விஜயம் நிகழு முன்பு இப் பலகட்சி மகாநாடு கூடவிருந்தது. அதனால் 'மிதவாதிகளான' இலங்கையின் அரசியல் தலைவர்களை மாநாட்டிற் பங்குபற்றும்படி மனம்மாற வைப்பது சாத்தியமாகக் காணப்படவில்லை.

தற்போது உள்ள இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எல்லைகளுள் மாகாண சபைகள் உருவாக்கப்படவுள்ளன. இச் சபைகளுக்கு உரித்தாக்க உத்தேசிக்கப்படும் அதிகாரங்களின் பரப்பும் தன்மையும் குறித்து ஓரளவு முன்னேற்றம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பப்பட்ட விளக்கங்களில் அடங்கியுள்ளது போலத் தென்படுகிறது. இலங்கை அரசினால் கடைசியாக அனுப்பப்பட்ட பிரேரணைகளின் பொருளடக்கமும் விபரங்களும் உள் ஆட்களுக்குத் தெரிந்ததே. இவர்கள் அறிந்தனவும் மேற்குறிப்பிட்ட விளக்கங்களும் இம் முன்னேற்றச் சாத்தியக்கூறுகளை அறியத்தருகின்றன.

இப்பிரேரணைத் தொகுப்பினுள் அடங்கியுள்ள முன்னேற்றம் பற்றித் தனிப்பட்ட, சுதந்திர வட்டாரங்கள் மத்தியில் ஓரளவு சாதகமான அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது. இதனை அவை தெளிவுபடுத்துகின்றன. உரித்தாக்கப்படவுள்ள அதிகாரங்களின் அமைவும், வடிவமும், காணிக்குடியமர்வு, சட்டமும் ஒழுங்கும் ஆகியன இத்தொகுப்பினுள் அடங்கும். அரசாங்கம் இவ்வாறு தரமுன்வந்துள்ள அதிகாரங்களுக்கும் இலங்கைத் தமிழர் விடுதலை இயக்கங்கள் மிகக்குறைவாக எதிர்பார்ப்பனவற்றுக்கும் இடையிலுள்ள இடைவெளி இன்னமும் மிக அகன்றே இருக்கின்றது. இது மிகத்தெளிவு.

இந்திய அரசாங்கத்தின் சார்பில் பேச்சர்ச்சைகளைக் கையாளும் நிபுணர்கள் பொதுவாக ஒரு கருத்துச் சார்புடையோராக இருக்கின்றனர் சிதம்பரம் தலைமையிலான தூதுக்குழுவினர் 1986 மே மாதத்தில் கொழும்பிலிருந்து தாய் நாடாகிய பாரதத்துக்கு மீண்டனர். பிரேரணைகளின் விளக்கங்கள் அக்குழுவினருக்கு அளிக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதற்கு ஆறு வாரங்களின் பின்னரே விளக்கங்களை இந்தியாவினால் பெற்றுக்கொள்ள முடிந்தது. அவை கலந்துரையாடல்களுக்கு அடிப்படையாக" அமையக்கூடிய ஒரு நிலைமைக்கு ஏற்பாடு செய்கின்றன எனவும் இந்நிபுணர்கள் கருதுகின்றனர். மேலும், ஒருவேளை தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர் வலிந்து பேரம்பேசி இணக்க உரையாடல்கள் நிகழ்த்துதற்கும் அவை உதவலாமென்றும் அவர்கள் எண்ணுகின்றனர்.

ஆனால் இம்முறை, புது டெல்லி அரசு, எதுவித நெருக்

—5ம் பக்கம் பார்க்க

பூரன்ட்லைன் ஜூன் 28—ஜூலை 11 இதழில் சிறப்பு நிருபர் ஒருவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### பயிற்சி நடத்த நடவடிக்கை

(வல்வெட்டித்துறை)

1986ம், 87ம் வருடத்திற்கான ஆங்கில சுருக்கெழுத்தாளர் தராதரப் பத்திரப் பயிற்சியும், படம் வரை பயில்வோர் பயிற்சியும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிபர் திரு. சி. இராசேந்திரா தெரிவித்துள்ளதாக, வடமராட்சி சுருக்கெழுத்தாளர் கழக பிரதம அமைப்பாளர் திரு.க வ.சிவச்சந்திரதேவன் அறிவித்துள்ளார்.

ஆங்கில சுருக்கெழுத்தாளர் தராதரப்பத்திரப் பயிற்சியை 86/87ம் வருடத்தில் நடாத்த வேண்டும் எனக் கோரி, வடமராட்சி சுருக்கெழுத்தாளர் கழகம் பிரதம அமைப்பாளர், யாழ் தொழில் நுட்பக் கல்லூரி அதிபருக்கு மகஜர் ஒன்றினைக் கடந்தவாரம் அனுப்பியது தொடர்பாக அதிபரை நேரடியாகப் பேட்டி கண்டபோதே மேற்கண்ட தகவலை அதிபர் அவரிடம் தெரிவித்துள்ளார்.

21-5-86ல் வெளியான அரசாங்கவர்த்தமானியில் 1986ம், 87ம் வருடத்திற்கு தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறும் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது, யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறும் மேற்படி இரு பயிற்சிகளுக்கும் விண்ணப்பங்கள் தவறுதலாகக் கோரப்படவில்லை எனவும், பின்னர், தான் உயர் கல்வி அமைச்சு அலுவலக அதிகாரியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது ஏனைய பயிற்சி நெறிகளைப் போன்று இவ்விரு பயிற்சிகளையும் நடாத்த அனுமதி அளித்துள்ளதாகவும், ஏனைய தொழில் நுட்பக் கல்லூரிகளில் இப் பயிற்சிகளுக்குக் கேட்கப்பட்ட தகைமையுடையவர்கள் இப் பயிற்சிகளை யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் பயில விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திறமையான செயற்பாடு என பாராட்டு

(உடுவில்)

யாழ். அபிவிருத்திச் சபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட தாவடிக் கிராமத்திலுள்ள, உப மின் நிலையங்களைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட குழு, அரசாங்க அதிகாரிகளினாலும், கிராமவாசிகளினாலும் பாராட்டப்படுமளவிற்கு மிகத்திறமையாக சேவையாற்றி வருகின்றது.

'தாவடி மின்சார அபிவிருத்திச்சபை' என்ற பெயரில் செயற்பட்டுவரும் இக் குழுவின் துரித நடவடிக்கையினால் அக்கிராமத்தில் சட்ட விரோத மின்பாவனை பெறுபவர்களின் எண்ணிக்கை அறவே இல்லை எனலாம். எவராவது இந் நடவடிக்கையில் ஈடுபடுவதாக தகவல் கிடைத்தால் உடனடியாக அவ்விடத்திற்குச் சென்று எச்சரிக்கையுடன் மின் துண்டிப்பை இக்குழு ஏற்படுத்துகின்றது.

இச் சேவையினால் இக்கிராமத்திற்கு வேண்டிய புதிய மின் இணைப்புக்களை தாமதமின்றி வழங்கக் கூடியதாக உள்ளது என உடுவில் மின் அத்தியட்சகர் திரு. கா. சாந்தாகிருஷ்ணன் தெரிவித்தார்.

### அனர்த்தம் மேலும் ஏற்படாதிருக்க...

(வேலணை)

அண்மையில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்கள் போல் மீண்டும் இவ்வாறு ஏற்படா வண்ணம் அமைதியும், சமாதானமும் வேண்டி யாழ். கச்சேரி பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு த. குலசேகரம் தலைமையிலான அறங்காவலர் சபையினர் நூற்று எட்டு நாட்கள் தொடர்ந்து தினமும் காலையில் அபிராமி அந்தாதி பாடல்களை ஓதி வந்தனர். அதன் பூர்த்தி விழா இரண்டாந் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

மேற்படி நூற்று எட்டு நாட்களும் அபிராமி அந்தாதி பாடல்களை ஆலய அறங்காவலர் சபை உறுப்பினரும் சமாதான நீதவானுமாகிய திரு. சி. நா. மதியாபரணம் ஓதிவந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மகஜர் கையளிப்பு

(வேலணை)

புங்குடு தீவு புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலய வீதிக்கு புதிய மின் இணைப்புக் கோரி அவ்வீதியிலுள்ள பொது மக்கள் பலர் சேர்ந்து மகஜரொன்றை புங்குடுதீவு மின் பாவனையாளர் சங்கத்தினரிடம் கொடுத்துள்ளனர். இம் மகஜரை திரு. தோ. ஞானப்பிரகாசம் பொது மக்கள் சார்பாக கையளித்துள்ளார் வேலணை மின் அத்தியட்சகர் அலுவலக அதிகாரியிடம் பின்னர் இம்மகஜர் அனுப்பி வைக்கப்பட்டது.

### நியமனம்

( அச்சுவேலி )

புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்திற்கு நிரந்தர அதிபராக கரவெட்டியைச் சேர்ந்த திரு. எஸ். மணிசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணுவித்தியாலயத்தில் பதில் அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். பாலசிங்கம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலைக்கு உதவி ஆசிரியராக இடமாற்றப்பட்டுள்ளார்.

### வெய்யில் தண்டனை

(குருநகர்)

பூம்புகாரிலுள்ள தென்னந் தோட்டம் ஒன்றில் வழக்கமாகத் தேங்காய், ஓலை, மட்டை திருடிவந்த வசந்தபுரத்தைச் சேர்ந்த ஆறு நபர் ள் நேற்றுக் காலை ஏழு மணியில் இருந்து நண்பகல் பன்னிரண்டு மணி வரை வசந்தபுரம் செபஸ்தியார் கோவிலடியில் மரங்களுடன் கட்டிய நிலையில் வெய்யிலில் நிறுத்தித் தண்டனை வழங்கப்பட்டது.

### திருமலையில் தினமும் இரவு ஊரடங்கு

திருமலை மாவட்டத்தில் மறு அறிவித்தல்வரை தினமும் இரவு நேரத்தில் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இரவு 8மணிமுதல் காலை 4மணிவரை இங்கு ஊரடங்கு தினமும் அமுலிலிருக்கும்.

# பாரத எல்லைக்குள் சீனர் ஊடுருவலால் நெருக்கடி!

(புதுடில்லி)

**நீண்டகால இடை வெளிக்குப் பின் பாரதத்திற்கும் சீனாவுக்கும் மத்தியில் எல்லைப் பிரச்சினை உருவாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக பாரதம் தனது வன்மையான ஆட்சேபத்தை சீனாவிடம் தெரிவித்துள்ளது.**

பாரதத்தின் அருணாசல் பிரதேசத்தில் ஏழு கிலோ மீற்றர் தொலைவு வரை சீனர் ஊடுருவல் செய்துள்ளதாகப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாகப் பாரத வெளியுறவு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் 'ஊடுருவல் செய்தோரில் சிலர் சீருடையினர். இவ்விதமாக மொத்தம் நாற்பது பேர் வந்துள்ளனர்.

இன்னமும் அவர்கள் அங்கேயே இருப்பதாகவும் கருதப்படுகிறது' என்று சொன்னார்.

இவ்விதம் அவ்வப்போது ஊடுருவல் இடம் பெற்றிருந்தாலும் இது அதிக தொலைவிலான ஊடுருவல் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதி தமக்கே சொந்தம் என சீனா கூறிக் கொள்கிறது.

இந்த எல்லை மீறல் குறித்துப் பிரதமந்திரி திரு. ராஜீவ் காந்தி உயர் மட்ட ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதற்கிடையில் எல்லை மீறல் குறித்து எதிர்வரும் திங்கட்கிழமை இருதரப்பினரும் கலந்து பேசவுள்ளனர்.

பாரதக்குழு சனிக்கிழமை சீனா புறப்படுகிறது.

### வரலாற்றில் முதல் தடவையான நிகழ்வு

# அமெ. தூதுவராக கறுப்பர் பிரிட்டோரியா அதிர்ச்சி

(ஜொஹனஸ்பேக்)

**தென்னாபிரிக்காவுக்கான தனது புதிய தூதுவராகக் கறுப்பு இனத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவின் இத் தீர்மானம் பிரிட்டோரியா அரசுக்கு அதிர்ச்சியை அளித்திருப்பதாகக் கூறப்படுகிறது.**

தனது புதிய தூதுவராக திரு. றொபேட் பிறவுன் என்ற கறுப்பரை அமெரிக்கா நியமிக்கவுள்ளது.

தனது தூதுவராகத் தென்னாபிரிக்காவில் கறுப்பர் ஒருவரை அமெரிக்கா நியமிப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறு இருக்க, அவசரகால நிலையைப் பயன்படுத்தி தான் வன்முறைகளை முற்றாக எடுக்கப் போவதாகப் பிரிட்டோரியா அரசு அறிவித்துள்ளது.

சமீபத்திய கலவரங்களில் 144 பேர் கொல்லப்பட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சில தினங்களுக்கு முன் கூட வெள்ளையரல்லாத அறுவர் கொல்லப்பட்டதாகவும் தகவல் எட்டியுள்ளது.

### காமன்வெல்த் செயலர் கோரிக்கை

## தென்னாபிரிக்க விடயத்தில் உடன்பாடு காண தேவை

( லண்டன் )

தென்னாபிரிக்கா மீதான பொருளாதாரத் தடை விதிப்புக் குறித்து காமன் வெல்த் நாடுகள் உடன்பாடொன்றைக் காணவேண்டுமென்று அதன் தலைமைச் செயலாளர் டாக்டர் ரம்பால் கூறியுள்ளார்.

தனது இக்கருத்தை அவர் லண்டனில் வைத்து வெளியிட்டார்.

காமன் வெல்த் விளையாட்டு விழாவில் கலந்து கொள்வதில்லை என்ற தம் தீர்மானத்தை குறிப்பிட்ட சில உறுப்பு நாடுகள் திறந்த மனதுடன் பரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

தென்னாபிரிக்கா மீது பொருளாதாரத் தடை விதிக்க பிரிட்டன் தயக்கம் காட்டுவதால் ஐந்து ஆபிரிக்க நாடுகள் மேற்படி விழாவைப் பகிஷ்கரிக்க முடிவுசெய்துள்ளன என்பது தெரிந்ததே.

### நைரோபியில் சந்திப்பு

(லண்டன்)

தான்ஸானியா, உகண்டா முதலான சில நாடுகளின் தலைவர்கள் சூடான் பிரதம மந்திரியை நைரோபியில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். இப் பேச்சுவார்த்தைகள் இருநாட்கள் நீடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

### உறுதி

(டாக்கா)

பாரத எல்லைக்குள் பழங்குடி மக்கள் நுழைய மாட்டார்கள் என பாரதத்திடம் பங்களாதேஷ் உறுதியளித்துள்ளது.

### இராணுவ...

...4ஆம் பக்கத் தொடர்

குதலையும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் மேலிடத் தலைவர் அ. அமிர்தலிங்கதிதின் மீதும், அவரது சகாக்கள் மீதும் பிரயோகிக்கும் பாங்கு உடையதாக இருக்கவில்லை. கூட்டணித் தலைவர்கள் சிலரைப் பொறுத்தவரையில், சிக்கலான ஒரு காரணி அவர்கள் செயல் லாவண்யத்தை தட்டுப்படுத்துவது அப்பட்டமாகத் தெரியும், தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளுக்கு எமது இச் செயல் உவப்பாகப் படுமா? படாதா?, இதனை அறிய விரும்பி, இத்தலைவர் சிலர் அடிக்கொரு தடவை தமது தோளுக்கு மேலால் பின்நோக்கிப் பார்வையை வீசும் பழக்கம் உடையோராக இருக்கின்றனர். (தொடரும்)

### மீன் விலை உச்சத்துக்கு போகிறது

(சுன்னாகம்)

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மீனின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. ஒருகிலோ 40-45 ரூபா வரை விற்கப்படுவதால் ஏழைமக்கள் வாங்கிக் கொள்ளமுடியாத நிலை உருவாகியுள்ளது. அண்மையில் பரவைக் கடலில் மீன் பிடித்தல் தடுக்கப்பட்டுள்ளதால் மிகக்குறைவாகவே சந்தைக்குவரும் மீன்கள் சொன்ன விலைக்கே விற்பனையாகின்றன.

சூடை முதலிய சிறுரக மீன்களே அதிகமானவர்களால் வாங்கிச் செல்ல முடிவதாகவும் அங்கலாய்ப்புத் தெரிவிக்கப்படுகிறது.

### இக்குறை நீங்கினால் நிறைவுகள் பல

(உடுவில்)

ஒரு மகாவித்தியாலயம் உட்பட மூன்று பாடசாலைகளை இருந்தும் மல்லாகத்தில் விளையாட்டு மைதானம் இல்லாத குறை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது.

மாத்தளையில் நடைபெற்ற யோன்புர - 1986ல் கலந்து கொண்ட மல்லாகம் இளைஞர் கழகம் இதுபற்றி கல்வி அமைச்சரும், இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சருமான திரு. ரணில் விக்கிரம சிங்காவுக்கு எடுத்துக் கூறியுள்ளது. மேலும் இக் குறைபாடு பற்றி யாழ். அரசாங்க அதிபர், வட மாநிலக் கல்விப் பணிப்பாளர், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி, வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர், வடபிரதேச இளைஞர் சேவை மன்ற உதவிப்பணிப்பாளர் ஆகியோருக்கும் எழுத்து மூலமான கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.

இக் குறைபாட்டிற்கு விரைவில் தீர்வுகிடைக்குமாயின் பாடசாலைப் பிள்ளைகள் உட்பட பல விளையாட்டுக் கழகங்களும் பயனடையலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈழமுரசு

## மன்னரில் தடைமுகாம்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன!

(வண்ணார்பண்ணை)

மன்னரில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் காரணமாக இராணுவத்தினரின் தடைமுகாம்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனுல் பிரயாணிகளுக்கு பல அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கிடையில் அடம்பன் பகுதியிலுள்ள காட்டுப் பகுதிகளிலுள்ள பற்றைகளுக்குள் பல சடலங்கள் அழுகிய நிலையில் கிடப்பதாகவும் இதனுல் தர்நாற்றம் வீசிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயப்பட்டவர்கள் பலர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லமுடியாததால் மரணித்ததாகவும், பலர் காயங்களுடன் வீடுகளில் தங்கியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. சடலங்களை தேடும் முயற்சி நேற்றுக்காலையும் இடம்பெற்றது.

மேலும் புதிய கட்டுப்பாடு

# வடபகுதி தபால் பொதி ஏற்றும் பஸ்கள்

அனுராதபுரம் தபால் நிலைய

# வளவுக்குள் செல்வதற்குத் தடை!

(வவுனியா)

வடபகுதி - கொழும்பு தபால் சேவை மேலும் ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. அனுராதபுரத்திற்கு வடக்கில் இருந்து கொண்டுசெல்லப்படும் தபால் பொதிகளில் குண்டுகள் இல்லை என்று முதலாம்தர தபால் அலுவலகர் ஒருவர் எழுத்து மூலமாக அத்தாட்சிப்படுத்தவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வடபகுதி பஸ்கள் அனுராதபுரம் தபால் கந்தோர் வளவினுள் அனுமதிக்கக் கூடாது எனவும் புதிய விதிமுறை அமுலாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பில் இருந்து வந்து வடக்கே வரவுள்ள சில தபால் பொதிகள் அனுராதபுரத்தில் தேங்கியுள்ளன. இப்புதிய விதிகளால் தபால் சேவைகள் பாதிக்கப்படவுள்ளதாக வவுனியா தபால் அத்தியட்சகர், உயரதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

வடபகுதி தபால் பொதிகள் கடந்தசில தினங்களாக வவுனியாவில் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

## வவுனியாவரையும் ரயிலை ஓடவிடுவதற்கு முயற்சி

தற்பொழுது அனுராதபுரம் வரையில் நடைபெறும் ரயில் சேவையை வவுனியா வரையில் நடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

வவுனியாவரையில் இச்சேவையை நடத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு அனுமதியளித்துள்ளதாகவும் இப்பொழுது ரயில்வே திணைக்களத்தின் அனுமதியே பெற வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அனேகமாக அடுத்தவார மளவில் இச்சேவையை ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும் எனவும் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இப்போதைய நிலைமை

மாகாண சபைக்கு

## மகா சங்கத்தினர் எதிர்ப்பில்லை; ஆதரவுமில்லை!

புதிய மாகாணசபை யோசனைகள் தொடர்பாகத் தாம் இன்னும் ஆராயவில்லை எனவும் அதனை எதிர்ப்பது பற்றிய தீர்மானமெதுவும் இதுவரை எடுக்கப்படவில்லையெனவும் மல்வத்தை பீடாதிபதி ஆனந்த மகாநாயக்க தேரோ அறிவித்துள்ளார்.

மாகாணசபை யோசனைகளை மல்வத்தைப் பீடம் எதிர்ப்பதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் தவறானவை எனவும், இதுபற்றி விரைவில் ஆராயப்பட்டதின் பின்னரே மேற்கொண்டு செய்யவேண்டியது பற்றித் தீர்மானிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

மாகாணசபை யோசனையை ஆதரிப்பது பற்றியும், தாம் எந்தமுடிவையும் எடுக்கவில்லை எனவும் மகாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

### திருக்கோவில் ...

படையினரில் பலர் கொல்லப்பட்டதாகவும், சிலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ராணுவ...

சுலோகம் காணப்பட்டது.

ஊர்வலம் கச்சேரியைச்சென்றடைந்த பின்னர் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. லொறி போக்குவரத்துச் சங்கத் தலைவர் திரு. எஸ். அழகானந்தன் இம் மகஜரைக் கையளித்தார்.

இதே வேளையில்புதிய'பாஸ்' முறையைக் கண்டித்து நேற்று முழுநாளும் குடாநாட்டில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள் அனைத்தும் முற்றுக மூடப்பட்டிருந்தன. கடைகளும் எதுவுமே திறக்கப்படவில்லை வெளியூர்களிலிருந்து வந்த பஸ்களைத் தவிர வேறெந்த பஸ்களும் சேவையில் ஈடுபடவில்லை.

### வழக்கு...

சோதியை சந்தித்து நேற்றைய நிலைமைகளை விளக்கியதையடுத்து நேற்றைய விசாரணைகள் அடுத்த புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டன.

இதேபோல மாஜிஸ்திரேட் நீதிமன்ற வழக்குகளும் வெவ்வேறு தினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

### மூதூரில் ...

யவந்துள்ளது.

கொண்டுசெல்லப்பட்டவர்கள் பற்றிய தகவல் எதனையும் பெறமுடியவில்லையென்று உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

நேற்றிரவு மீண்டும் இப்பகுதியில் சூட்டுச்சத்தங்கள் கேட்டதாகவும், படையினர் தொடர்ந்தும் தாக்குதல் மேற்கொண்டிருக்கலாமெனவும் கூறப்படுகின்றது.

### தேர்தலா?...

மாகாணசபை யோசனைகளை நிராகரிப்பதற்கும், அரசியல் கட்சிகளின் மாநாட்டில் பங்கு பற்றுமைக்குமான விளக்கங்களைக் கொண்டுள்ளது. இக்கடிதம் நேற்று முன்தினம் ஜனதிபதிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

இதேவேளை பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்தும்படி திருமதி பண்டாரநாயக்கா விடுத்த கோரிக்கையை தான் 1989ம் ஆண்டு பரிசீலனைக்கு எடுப்பதாகவும் ஜனதிபதி தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

### தொலை தொடர்பு ..

ஸாரின் விடுதியை இராணுவத்தினர் ஆக்கிரமித்து நிலைகொண்டிருந்தமையால் பாதுகாப்பு இன்மை காரணமாக ஊழியர்கள் அச்சத்தால் வேலைக்குச் செல்வதைத் தவிர்த்திருந்தனர்.

இராணுவ அதிகாரியினுல் கொடுக்கப்பட்ட உறுதிமொழியின்பேரிலும் திணைக்கள அதிகாரிகளின் வேண்டுதலினுலும் திணைக்களம் நேற்றுமுதல் உயிர்பெறத்தொடங்கியுள்ளது. தற்போதைக்குத் தற்காலிகமாகச் சகல பிரிவுவேலைகளும் காலை ஒன்பது மணி முதல் நண்பகல் பன்னிரண்டு மணிவரை நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது

### பழைய...

இந்த வண்டி கொழும்பில் இருந்து வரும்போது வழியில் பல தடவைகள் பழுதடைந்து இறுதியில் கட்டியிழுக்கப்பட்டே கொண்டுவரப்பட்டது.


# ஈழத்து தமிழ் பேசும் பெருமக்களுக்கும்

# சுதந்திர தமிழ் ஈழத்தை வென்றெடுக்க

# போராடும் புனித இயக்கங்களுக்கும்

# பணிவான விண்ணப்பம்

அரச கெடுபிடிகளின் மத்தியிலும் வேறு பல சிரமங்கள் மத்தியிலும் தமிழ் பேசும் பெருமக்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களையும், இனனேரன்ன அத்தியாவசிய பொருட்களையும் யாழ். பெருமக்களுக்கு தருவிக்கும் தலையாய பணியில் யாழ். லொறி போக்குவரத்துச் சேவையினர் ஈடுபட்டிருப்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்ததே.

எமது ஸ்தாபனம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வழமையான சிரமங்களுக்கூடாக பொருட்களை லொறியில் கொண்டுவரும் வேளையில் எமது சொந்த மண்ணில் (விஸ்வமடு றெட்பானு அருகாமையில்) 14-6-86இல் கடத்தப்பட்டமை தமிழ் பேசும் பெருமக்களுக்கும், குறிப்பாக பொருள் நுகர்வோருக்கும் இழைக்கப்பட்ட அநீதியாக நாம் கருதுகிறோம். இந்த அநீதியையும், அநியாயத்தையும் கண்டித்து சில பொது ஸ்தாபனங்களும், பொது அமைப்புகளும், சில புனித இயக்கங்களும் இந்த தவறை இழைத்தவர்கள் தமது தவறை ஒப்புக்கொண்டு அதற்கு பிராயச்சித்தம் செய்யவேண்டும் என்று அறிக்கைகள் விட்டிருந்தும் இதுவரை எந்த விதமான பலனையும் காணேம்.

லொறிப் போக்குவரத்து சேவை எத்தகைய அத்தியாவசிய சேவை என்பதை தமிழ் பேசும் பொதுமக்கள் 16-7-86 இல் ஒருங்கிணைந்து நடாத்திய பூரண ஹர்த்தால் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த எமது லொறிச் சேவைக்கு நேர்ந்த துர்ப்பாக்கியத்துக்கு ஈடு செய்யும் பணிக்கு தமிழ் பேசும் பெருமக்களினதும், புனித இயக்கங்களினதும் பேராதரவை மிகவும் தாழ்மையுடன் மீண்டும் மீண்டும் வேண்டி நிற்கிறோம்.

இங்ஙனம்

தமிழ் பேசும் பெருமக்களின் சேவையிலீடுபட்டிருக்கும்

எஸ். வி. முருகேசு ஸ்தாபனத்தினர் B/1418


## மீண்டும் நடைபவனி

(சுன்னுகம்)

நீண்டநாள் இடைவெளியின் பின் காங்கேசன்துறை முகாமிலிருந்து வெளிவந்த இராணுவத்தினர் நடை பவனியாகக் கீரிமலைக்கும் அங்கிருந்து கற்குவாறி அமைந்தவிடத்திற்கும் சென்று திரும்பியுள்ளனர். நேற்று முன்தினம் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இரண்டு மைல் நீளமான இந் நடைபவனியை மேற்கொண்டபோது பீரங்கி பொருத்தப்பட்ட படகொன்று கரையை அண்மித்தவாறு அவர்கள் சென்றடைந்த இடம்வரை சென்று பின் அவர்களுடனே மீண்டது.

இன்று

## ஒருமணிநேர மறியல்

1980ம் ஆண்டுஜூலை பொது வேலை நிறுத்தத்தின் நினைவாக யாழ். செயலகத்தின் முன்பாக இன்று நண்பகல் பன்னிரண்டு மணிமுதல் ஒருமணிவரை மறியல்போராட்டம் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வட பிரதேசத்திலுள்ள பதின்நான்கு தொழிற்சங்கங்கள்இணைந்து இப்போராட்டத்தினை நடத்தவுள்ளன.

## சீனி, மாவு வந்துள்ளது

(சுன்னுகம்)

காங்கேசன்துறைதுறைமுகத்தில் வந்து நிற்கும் இரு கப்பல்களிலிருந்து பொருட்கள் இறக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகின்றது. ஒரு கப்பலிலிருந்து சீனியும், மற்றையதிலிருந்து மாவும் தரையிறக்கப்படுகின்றன.

## தியாகராசா சடலம்

(திருமலை)

திருமலை பத்தாம் குறிச்சியில் கொம்பனிப் பிள்ளையார் கோவில் முன்பாக எரிந்த நிலையில் காணப்பட்ட சடலம் திருமலை கச்சேரி சட்ட நடைமுறை உத்தியோகஸ்தர் ஆ. தியாகராசா (53) வினுடையது என அடையாளம் காணப்பட்டது.

## கடமைக்கு செல்ல பணிப்பு

கோட்டை முகாமுக்கு அருகில் உள்ள தொலைத்தொடர்பு திணைக்களத்தின் ஊழியர்கள் நேற்று தமது கடமைக்கு திரும்பினர். இதனையடுத்து யாழ் பிரதம தபால் நிலைய ஊழியர்களையும் அங்கே கடமைக்குச் செல்லுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இதனுல் இவ்வூழியர்கள் அங்கு செல்வது பற்றிய முடிவு சில தினங்களில் தெரியவரும் என கூறப்படுகிறது.

### தமிழ்...

அரசு தங்களையோ, இளைஞர்களையோ வற்புறுத்தவில்லை என்று சொன்ன அமிர்தலிங்கம், அப்படி இனிமேலும் செய்யாது என்ருர்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 17-07-86 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437